# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஒன்பதாம் பத்து

## இரண்டாம் திருவாய்மொழி - பண்டைநாளாலே
## ஆழ்வார் இயற்கை உறவினான எம்பெருமானைத் திருப்புளிங்குடியில் கண்டு தமக்கு எல்லா உறவின் காரியமும் குறைவில்லாமல் அருளுமாறு ப்ரார்த்தித்தல்

** பண்டை நாளாலே நின் திருவருளும் *
பங்கயத்தாள் திருவருளும்
கொண்டு * நின் கோயில் சீய்த்துப் பல்படிகால் *
குடி குடி வழி வந்து ஆட்செய்யும் **
தொண்டரோர்க்கு அருளிச் சோதி வாய் திறந்து * உன்
தாமரைக் கண்களால் நோக்காய் *
தெண்திரைப் பொருநல் தண் பணை சூழ்ந்த *
திருபுளிங்குடிக் கிடந்தானே! 1

குடி கிடந்து ஆக்கம் செய்து * நின் தீர்த்த
அடிமைக் குற்றேவல் செய்து * உன் பொன்
அடிக் கடவாதே * வழி வருகின்ற
அடியரோர்க்கு அருளி ** நீ ஒரு நாள்
படிக்கு அளவாக நிமிர்த்த * நின் பாத
பங்கயமே தலைக்கு அணியாய் *
கொடிக் கொள் பொன் மதிள் சூழ் குளிர் வயல் சோலைத் *
திருபுளிங்குடிக் கிடந்தானே! 2

கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம்
கிடத்தி? * உன் திரு உடம்பு அசைய *
தொடர்ந்து குற்றேவல் செய்து * தொல் அடிமை
வழி வரும் தொண்டரோர்க்கு அருளி **
தடங்கொள் தாமரைக் கண் விழித்து * நீ எழுந்து
உன் தாமரை மங்கையும் நீயும் *
இடங்கொள் மூவுலகும் தொழ இருந்தருளாய் *
திருப்புளிங்குடிக் கிடந்தானே! 3

புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கை
இருந்து * வைகுந்தத்துள் நின்று *
தெளிந்த என் சிந்தை அகம் கழியாதே *
என்னை ஆள்வாய்! எனக்கு அருளி **
நளிர்ந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப *
நாங்கள் கூத்தாடி நின்று ஆர்ப்ப *
பளிங்கு நீர் முகிலின் பவளம் போல் * கனி வாய்
சிவப்ப நீ காண வாராயே 4

பவளம் போல் கனி வாய் சிவப்ப நீ காண
வந்து * நின் பல் நிலா முத்தம் *
தவழ் கதிர் முறுவல் செய்து * நின் திருக் கண்
தாமரை தயங்க நின்றருளாய் **
பவள நன்படர்க் கீழ்ச் சங்குறை பொருநல் *
தண் திருப்புளிங்குடிக் கிடந்தாய்! *
கவள மா களிற்றின் இடர் கெடத் தடத்துக் *
காய் சினப் பறவை ஊர்ந்தானே! 5

காய் சினப் பறவை ஊர்ந்து * பொன் மலையின்
மீமிசைக் கார் முகில் போல் *
மா சின மாலி மாலி மான் என்று * அங்கு
அவர் படக் கனன்று முன் நின்ற **
காய்சின வேந்தே! கதிர் முடியானே! *
கலி வயல் திருபுளிங்குடியாய்! *
காய் சின ஆழி சங்கு வாள் * வில் தண்டு
ஏந்தி எம் இடர் கடிவானே! 6

எம் இடர் கடிந்து இங்கு என்னை ஆள்வானே! *
இமையவர் தமக்கும் ஆங்கு அனையாய்! *
செம்மடல் மலரும் தாமரைப் பழனத் *
தண் திருப்புளிங்குடிக் கிடந்தாய்! **
நம்முடை அடியர் கவ்வை கண்டு உகந்து *
நாம் களித்து உள நலம் கூர *
இம்மட உலகர் காண நீ ஒரு நாள் *
இருந்திடாய் எங்கள் கண் முகப்பே 7

எங்கள் கண் முகப்பே உலகர்கள் எல்லாம் *
இணை அடி தொழுது எழுது இறைஞ்சி *
தங்கள் அன்பு ஆரத் தமது சொல் வலத்தால் *
தலைத் தலைச் சிறந்து பூசிப்ப **
திங்கள் சேர் மாடத் திருப்புளிங்குடியாய்! *
திருவைகுந்தத்துள்ளாய்! தேவா! *
இங்கண் மா ஞாலத்து இதனுளும் ஒரு நாள் *
இருந்திடாய் வீற்றிடங் கொண்டே 8

வீற்றிடங் கொண்டு வியன் கொள் மா ஞாலத்து *
இதனுளும் இருந்திடாய் * அடியோம்
போற்றி ஓவாதே கண் இனை குளிரப் *
புது மலர் ஆகத்தைப் பருக **
சேற்றிள வாளை செந்நெலூடு உகளும் *
செழும் பணைத் திருப்புளிங்குடியாய்! *
கூற்றமாய் அசுரர் குல முதல் அரிந்த *
கொடு வினைப் படைகள் வல்லானே! 9

கொடு வினைப் படைகள் வல்லையாய் * அமரர்க்கு
இடர் கெட அசுரர்கட்கு இடர் செய் *
கடு வினை நஞ்சே! என்னுடை அமுதே! *
கலி வயல் திருப்புளிங்குடியாய்! **
வடிவிணை இல்லா மலர் மகள் * மற்றை
நில மகள் பிடிக்கும் மெல் அடியை *
கொடு வினையேனும் பிடிக்க நீ ஒரு நாள் *
கூவுதல் வருதல் செய்யாயே 10

** கூவுதல் வருதல் செய்திடாய் என்று *
குரை கடல் கடைந்தவன் தன்னை *
மேவி நன்கு அமர்ந்த வியன் புனல் பொருநல் *
வழுதி நாடன் சடகோபன் **
நா இயல் பாடல் ஆயிரத்துள்ளும் *
இவையும் ஓர் பத்தும் வல்லார்கள் *
ஓவுதல் இன்றி உலகம் மூன்றும் அளந்தான் *
அடி இணை உள்ளத்து ஓர்வாரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---